1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. பேரவையில் எந்தெந்த விஷயங்களை எவ்வெப்பொழுது எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு எடுத்திருக்கிறோம். அந்த முடிவின்படியே செய்து கொள்ளலாம்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டத்தில் கம்பளிப் பூச்சிகளின் தொல்லையால் நிலக்கடலைப் பயிர் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள், மதுரை மாவட்டத்தில் கம்பளிப்பூச்சிகளின் தொல்லையால் நிலக் கடலைப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட விஷயமாதலால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்.

4. விளக்க உரை.

பொறியியல் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகள் குறித்து கல்வி—சுகாதார அமைச்சரின் விளக்க உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை 82-வது விதியின் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் மாணவர் பிரதிநிதிகள் நேற்று என்னைச் சந்தித்து பொறியியல் கல்லூரி மாணவர்களின் மனத்தை அலைக்கழித்துவரும் சில சிக்கல்களைப் பற்றியும், அதன் விளைவாக அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைபற்றியும் என்னிடம் மனம் விட்டுப் பேசினர். நடைமுறையில் உள்ள தொழில் நிலைகளுக்கேற்ப தங்களைத் தகுதிப்படுத்துகின்ற செய்முறைப் பயிற்சி இல்லாததன் காரணமாக பட்டம் பெற்ற பிறகு தங்களுடைய தகுதிக்குரிய வேலைகளைப் பெறுவதில் பெரும்பான்மையான பொறியியல் பட்டதாரிகள் இடர்ப்படுகின்றனர் என்ற அவர்களின் கவலையை மாணவர் தெரிவித்தனர். எனவே, ஓராண்டுக் கால அளவிற்கு மாணவர்கள் அனைவருக்கும் தகுந்த படிப்பு உதவித் தொகையுடன் விருப்ப அடிப்படையில் செய்முறைப் பயிற்சி அளிக்க வகை செய்யும் ஒரு திட்டத்தை அரசு வகுக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. பொறியியல் பட்டதாரிகளுக்காக செய் முறைப் பயிற்சியினை வரையறுத்த அளவில் அளிப்பதற்கான முயற்சி இந்திய அரசின் கல்வி அமைச்சினால் ஏற்கப்பட்ட ஒரு திட்டத்தின்கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளது என்று மாணவர் களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பெருமளவு பட்டதாரிகளுக்கு